**கூடுதல் சார்பு நீதிமன்றம், பழனி**

**O.S. No.166/2024**

2026ஆம் வருடம் ஏப்ரல் மாதம் 17ஆம் நாள் ----என்பவரின் சாட்சிய வாக்குமூலம் 1873 ஆம் வருடத்தின் 10-வது விதிமுறைகளின்படி ஆணையிட்டு உறுதி கூறப்படுகிறது.

| | | | |
|---|---|---|---|
| பெயர் | : திரு. கன்னிமுத்து (வா.சா.1 ) | தொழில் | : விவசாயம் |
| த/பெ. | : திரு. தர்மலிங்கம் | வயது | : 55 |
| க/பெ. | : திரு. | | |
| கிராமம் | : பழனி நகர் | இனம் | : ஆண் |
| தாலுகா | : பழனி | நாள் | : 17.04.2026 |
| மாவட்டம் | : திண்டுக்கல் | | |

<u>முதல் விசாரணை :-</u>

நான் இவ்வழக்கில் வாதி. என்னுடைய சாட்சியத்தை எனது நிரூபண வாக்குமூலமாக தாக்கல் செய்கிறேன். அதில் உள்ள கையெழுத்துக்கள் என்னுடையவை தான். என்னுடைய தகவலின் அடிப்படையில் தான் அது தயார் செய்யப்பட்டது.

| | |
|---|---|
| வா.சா.ஆ.1 | : 15.07.2022 தேதியிட்ட வாதிக்கு, 1-ம் பிரதிவாதியின் கணவரும், 2, 3 பிரதிவாதிகளின் தகப்பனாருமான இறந்துபோன வேலுச்சாமி எழுதிக்கொடுத்த தாவா காசோலை - அசல். |
| வா.சா.ஆ.2 | : 13.09.2022 தேதியிட்ட இறந்துபோன வேலுச்சாமியின் வங்கி கணக்கில் போதிய பணம் இல்லையென்று காசோலை திருப்பப்பட்டு வாதியின் வங்கியால் கொடுக்கப்பட்ட மெமோ - அசல். |
| வா.சா.ஆ.3 | : 03.10.2022 தேதியிட்ட பிரதிவாதிகளுக்கு வாதி கொடுத்த வழக்கறிஞர் அறிவிப்பு - அலுவலக நகல். |
| வா.சா.ஆ.4 | : 07.10.2022 தேதியில் 1, 2 பிரதிவாதிகள் வழக்கறிஞர் அறிவிப்பை பெற்றுக்கொண்டதற்கான அஞ்சலக ஒப்புகை அட்டைகள் (இரண்டு எண்ணிக்கை) - அசல். |
| வா.சா.ஆ.5 | : 13.10.2022 தேதியில் 3-ம் பிரதிவாதி வழக்கறிஞர் அறிவிப்பை பெற்றுக்கொள்ளாமல் திரும்பி வந்த கவர் - அசல். |

தாவாப்படி தீர்ப்பாகக் கேட்டுக்கொள்கிறேன்.

**<u>குறுக்கு விசாரணை</u>** :- வேண்டுகோளின்படி ஒத்திவைக்கப்படுகிறது.

Taken down by me in open court and
read over to the witness in Tamil and
acknowledged by him/her to be correct.

K. BHARATHI
Digitally signed by K. BHARATHI
Date: 2026.04.17 17:04:00 +0530

Additional Sub Judge,
Palani.